செ.வெ.எண்:126 நாள்: 09.02.2011

தமிழக அரசின் ஆணையின்படி தை திங்கள் முதல் நாள் தமிழ் புத்தாண்டு 2011 ஐ தமிழக மக்கள் சிறப்பாக கொண்டாட இலவச பொங்கல் பொருள்கள் அடங்கிய பைகள் நியாயவிலை அங்காடிகள் மூலம் 1.1.2011 முதல் 14.1.2011 வரை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. குடும்ப அட்டைதாரர்கள் எந்தவித இடையூறுமின்றி பொங்கல் பொருள்கள் பெறுவதற்கு ஏதுவாக 2.1.2011 மற்றும் 9.1.2011 ஆகிய இரு விடுமுறை நாட்களிலும் நியாயவிலை அங்காடிகளுக்கு பணி நாட்களாக அறிவிக்கப்பட்டு அந்த தினங்களில் நியாயவிலை கடைகள் திறக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டன. இதனை ஈடு செய்யும் வகையில் 5.2.2011 மற்றும் 12.2.2011 ஆகிய இரு தினங்களை நியாயவிலை அங்காடிகளுக்கு விடுமுறை தினங்களாக அரசு அறிவித்திருந்தது. அதன்படி வரும் 12.2.2011 ( சனிக்கிழமை ) அன்று நியாயவிலை அங்காடிகளுக்கு விடுமுறை தினம் என்பதால் அன்று நியாயவிலை அங்காடிகள் செயல்படாது என்ற விவரம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) கா. பாலச்சந்திரன்
ஆணையாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9